# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

முறையீட்டு மனு எண்: 0596/2016/ந

ஆணை எண்: 0018/2017

நாள்: 06/02/2017

22.06.2016 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற
நடுவத்தால் தாமாகவே பதிவு செய்யப்பட்டது

நகராட்சி ஆணையர்,
திருவள்ளூர் நகராட்சி.

— எதிர் மனுதாரர்

## ஆணை

22.06.16 நாளிட்ட 'தினமலர்' நாளிதழில் "மூடிக்கிடக்கும் கடைகளால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு" எனும் தலைப்பில் புகைப்படத்துடன் வெளிவந்த செய்தி, 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறை மன்ற நடுவத்தால் தாமாகவே முறையீடாகப் பதிவு செய்யப்பட்டு உரிய விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2. மேற்படி செய்தியில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பான உண்மை நிலை குறித்தான அறிக்கையினை உரிய ஆவணங்களின் நகல்களுடன் ஒருவார காலத்திற்குள் தாக்கல் செய்திடுமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண்.0596/16/ந நாள்: 23.06.16ன்

மூலம் திருவள்ளூர் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி திருவள்ளூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.464/2015/அ1 நாள்:30.06.16ல் கீழ்க்கண்டவாறான அறிக்கை வரப்பெற்றது:-

"திருவள்ளூர் நகராட்சிக்கு சொந்தமான திரு.வி.க. பேருந்து நிலைய கடைகள், அறைகள் மற்றும் உணவு விடுதி போன்ற கடைகளுக்கு அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்:03.07.2007 மற்றும் நகராட்சி அலுவலக கோப்பு எண்.5463/2011/அ1ன் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.01.2012, 04.04.2012, 10.04.2012 மற்றும் 07.05.2012ல் கோரப்பட்டு சுய விருப்பத்தின் பேரில் கடை ஒன்றுக்கு அதிகபட்ச ஏலம் கோரிய குத்தகைதாரர்களுக்கு நகர்மன்ற தீர்மான எண்.260, நாள்:12.04.2012 மற்றும் தீர்மான எண்: 266 நாள்:14.05.2012ல் அனுமதி பெற்று 12.04.2012 மற்றும் 15.05.2012ம் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி உத்திரவின்படி குத்தகையின் மூலம் சுய விருப்பத்தின் பேரில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் கடைகளைப் பெற்று மாத வாடகை அடிப்படையில் கடைகளை நடத்தி வந்த கடைகாரர்கள் அவர்களது 06.03.2015 நாளிட்ட கடிதத்தில் கடை வாடகை மிக அதிகமாக உள்ளதென தெரிவித்தனர். இதன் தொடர்ச்சியாக ஏல நடவடிக்கைகள் 29.04.2015, 03.06.2015 மற்றும் 16.06.2015 தேதிகளில் பொது ஏல நடவடிக்கைகள் நடத்தப்பட்டதில் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. மேலும், ஏற்கனவே இருந்த கடைதாரர்கள் (குத்தகைதாரர்கள்) 2012-ல் போட்டியின் காரணமாக பெருந் தொகைக்கு ஏலம் எடுத்துவிட்டதால் கருணை அடிப்படையில் மறு ஏலம் விடவும், நியாயமான வாடகையை நிர்ணயம் செய்து அளிக்கவும் கோரியதைத் தொடர்ந்து நகராட்சியின் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு அரசாங்க மதிப்பு மற்றும் சந்தை மதிப்பு மற்றும் நகராட்சி உத்தேச மதிப்பு இதில் எது அதிகமோ அதனை ஆரம்ப ஏலக்கேள்வியாகக் கொண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், நகர்மன்றத்தின் ஒப்புதலின்படி உச்ச கேள்வி -

தாரர்களுக்கு குத்தகையினை ஒப்படைக்கும் படியான ஏலம் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக்கும்படி நகராட்சி ஆணையரது செயல்முறைகள் எண்.464/2015/அ1 நாள்:26.08.2015, 16.10.2015 மற்றும் 16.06.2016 நாளிட்ட கடிதங்கள் மூலம் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது."

3. இப்பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது (செங்கல்பட்டு மண்டலம்) ஆய்வறிக்கையும், குறிப்புரைகளும் அவசியமெனக் கருதப்பட்டதால், திருவள்ளூர் நகராட்சியின் தொடர்புடைய கோப்புகள் மற்றும் அனைத்து ஆவணங்களையும் கூர்ந்தாய்வு செய்து கடைகளின் எண்ணிக்கை, குத்தகை மதிப்பீடு, தற்போதைய நிலை குறித்தான தல ஆய்வு விவரங்கள் மற்றும் ஏல நடவடிக்கைகள் முடிக்கப்படாததால் நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள உத்தேச இழப்பீட்டுத் தொகை மதிப்பீடு ஆகிய விவரங்களடங்கிய ஆய்வறிக்கையினை குறிப்புரைகளுடன் சமர்ப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவ அசல் மனு எண்.0596/2016/ந நாள்:19.07.2016ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

4. அதனைத் தொடர்ந்து செங்கல்பட்டு மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது அறிக்கை ந.க.எண்.3441/2015/அ2, நாள்:3.8.2016 வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"திருவள்ளூர் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் 2011-2012 நிதியாண்டு வரை வருடா வருடம் ஏலம் விடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்:3.7.2007ன் படி மூன்றாண்டுகளுக்கொரு முறை 15% வாடகை உயர்வு செய்து 9 வருடங்களுக்கு தொகுப்பாக நகராட்சிக்கு சொந்தமான பெரிய குப்பம் மற்றும் திரு.வி.க. பேருந்து நிலையம் அருகில் உள்ள கடைகள் 2012-2013ம் ஆண்டிற்கான ஏலம் விடப்பட்டதில்

போட்டியின் காரணமாக மிக அதிகமான தொகையாக (அதாவது 2011-2012 ஏலத்தொகைக்கும் 2012-2013ல் கோரப்பட்ட ஏலத்தொகையுடன் ஒப்பிட்டால் 10 மடங்கு அதிகம்) ஏலம் கோரியவர்களுக்கு 01.04.2012 முதல் கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகள் முடிவுற்றதால் 01.04.2015 முதல் 15% வாடகை உயர்வு செய்து அளிக்க வேண்டிய நிலையில் குத்தகைதாரர்களது 6.3.2015 நாளிட்ட கடிதத்தின்படி, "கடை வாடகை அதிகமாக உள்ளது நியாயமான வாடகை நிர்ணயம் செய்து வழங்குமாறு" குத்தகைதாரர்கள் தெரிவித்துள்ளதுடன் வருவாய் ஆய்வர் தனது 16.03.2016 தேதிய கடிதத்தில் கடைகள் 1.4.2015 முதல் மூடியுள்ளதாக உறுதி செய்துள்ளார்.

எனவே, காலியாக உள்ள 26 எண்ணிக்கையிலான கடைகளுக்கும் முறையே 27.03.15, 29.04.15, 22.05.15 மற்றும் 16.06.15 தேதிகளில் ஏலம் நடத்தப்பட்டதில் "தற்போதுள்ள வாடகையினை விட குறையாமல் எடுக்க வேண்டும் என்பதால் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை." என ஏலப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

நகர்மன்றத் தீர்மான எண்.1824 நாள்:10.8.15ன் படி பொதுப் பணித்துறை நிர்ணயம் செய்த வாடகை மதிப்பீட்டிலிருந்து தற்போது சந்தை வாடகை மதிப்பில் நகராட்சி மறு நிர்ணயம் செய்து கொள்ள தீர்மானிக்கப்பட்டது. ஆனால், பொதுப் பணித்துறை மதிப்பீடு சந்தை மதிப்பீட்டை விட குறைவாக இருந்ததால் வாடகையினை குறைத்து நிர்ணயிப்பது தொடர்பாக அனுமதி கோரி திருவள்ளூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.464/2015/அ1, நாள்:26.8.2015ன் மூலம் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு உரிய வழியில் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், 1.4.2015 முதல் 31.5.2016 வரை கடைகள் குத்தகைதாரர்களின் பயன்பாட்டில் இருந்திருந்தால் நகராட்சி ரூ.54,52,874/- ஐ (21 கடைகளுக்கு மட்டும்) (5 கடைகளுக்கு 2011-12 முதலே ஏலத்தில் வராததால் தொகை நிர்ணயிக்க இயலவில்லை) வசூல் செய்திருக்க வேண்டும்.

எனவே, பெரிய குப்பம் மற்றும் திரு.வி.க. பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள மூடிக்கிடக்கும் கடைகள் அனைத்தும் கீழ்த்தட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வியாபாரம் நடந்துள்ளது என்பதாலும் செய்தித்தாள்களும் வருவாய் இழப்பு என செய்திபடுத்துவதாலும் வருவாய் வரத்தக்க இனங்களிலிருந்து வருவாய் தொடர்ந்து பெற கீழ்வரும் மூன்று வகையில் வாடகை நிர்ணயம் செய்ய நகராட்சியால் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டது.

(i) கடைசி மூன்று ஆண்டுகளின் ஏலத் தொகையில் சராசரி கண்டறிய கணக்கீடு செய்யப்பட்டதில் 2012-2013 முதல் 2014-2015 வரை ஒரே ஏலத் தொகை என்பதால் மாறுதலின்றி அதே தொகையே உள்ளது.

(ii) பொதுப் பணித்துறை மதிப்பீட்டின்படி மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளது.

(iii) காலியாக உள்ள கடைகளின் அருகிலுள்ள தனியார் கடைகளின் வாடகையை நேரில் சென்று சந்தை மதிப்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நிகழ்வுகளில் நகர்மன்றத்திற்கே முடிவுகள் எடுப்பதில் அதிகாரம் உள்ளதென்பதாலும் மேற்படி மதிப்பீடுகள் அனைத்தையும் நகர மன்றத்திற்கு தெரியப்படுத்தி மன்ற தீர்மானத்தின்படி ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் தறுவாயில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் கடைகள் தொடர்ந்து நடத்த வழிவகைகள் ஏற்படும். எனவே, இவ்வாறான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருப்பின் நகராட்சிக்கு மேற்படி வருவாய் தரத்தக்க இனங்கள் மூலம் தொடர்ந்து வருவாய் பெற்றிருக்க வழிவகை ஏற்பட்டிருக்கும் வருவாய் இழப்பையும் தவிர்த்து இருக்கலாம்.

மேலும், எதிர்வரும் காலங்களில் இது குறித்து ஆட்சேபணைகள் தணிக்கையில் எழுப்பப்படுவதை தவிர்க்கவும் தணிக்கையில் தெளிவுரை பெற அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, திருவள்ளூர் நகராட்சி ஆணையரது 25.07.2016 தேதியிட்ட கடிதம் உதவி இயக்குநர்,

உள்ளாட்சி நிதி தணிக்கை, திருவள்ளூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட மூன்று வழிமுறைகளில் வாடகை மதிப்பு நிர்ணயம் செய்து நகர மன்ற முடிவிற்கு வைக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு நகர மன்ற தீர்மானத்தின்படி அனைத்து கடைகளும் ஏலம்விடப்பட நகராட்சி நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது."

5. இப்பொருள் குறித்தான முன்னேற்ற விவரங்கள் தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் கோப்புகளுடன் 12.09.16 அன்று இம்முறை மன்ற நடுவத்தின் விசாரணைக்கு ஆஜராகுமாறு திருவள்ளூர் நகராட்சி ஆணையருக்கு அழைப்பாணை (அ.ம.எண்.0596/2016/ந நாள்: 10.08.2016) அனுப்பப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்:-

"01.04.2015 முதல் 21 கடைகள் காலியாக உள்ளன 2012 முதல் 5 கடைகள் இன்னமும் ஏலத்தில் விடாமல் இருந்தது. ஏலத்தில் தொகை அதிகம் என்று சொல்லி 01.04.2015 முதல் 21 கடைகள் மூடப்பட்டுள்ளன. 5 கடைகளுக்குரிய ஏலம் தொடர்ந்து விடப்படாமல் உள்ளது. 27.3.2015, 29.4.2015, 22.5.2015, 16.6.2015 என நான்கு தடவைகள் ஏலம் போடப்பட்டது. 5 கடைகள் ஏலம் விடப்படாமல் உள்ளது அவற்றுக்கு கட்டடம் கட்ட செலவு விவரங்களை 2 தினங்களில் சமர்ப்பிக்கப்படும். 10.08.2015 ஏலம் விடுவதற்காக மன்றப் பொருள் வைக்கப்பட்டது. சந்தை மதிப்பீட்டில் நிர்ணயம் செய்யலாமென தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை (எண்.53114/8/ஆர் 2) ஜனவரி 2009ல் வெளியிடப்பட்டது. அதன்படி ஏல ஒப்பந்தப்புள்ளி தீர்மானிக்கும் போது கடந்த 3 ஆண்டுகளில் சராசரி மற்றும் கடந்த ஆண்டு குத்தகைத் தொகை இவைகளுக்குக் குறையாமல் நிறைவு செய்ய வேண்டும். திருவள்ளூர் நகராட்சியிலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு 26.08.2015ல் அறிவுரை வழங்கிடக் கோரி

கடிதம் அனுப்பப்பட்டது. இவ்வலுவலக கடிதம் ந.க.464/2015/அ1 நாள்:16.10.2015 ஐ நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திலிருந்து கோரப்பட்டது அதன்பிறகு எந்தஆணையும் பெறப்படவில்லை."

6. இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.:465/2015/அ1, நாள்:15.09.2016ல் கீழ்க்கண்ட கூடுதல் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன:-

"இந்நகராட்சிக்குட்பட்ட பெரிய குப்பம் பேருந்து நிலைய பகுதியில் நகராட்சி பொது நிதியின்கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் 2013-ல் (நகர்மன்ற தீர்மான எண்.83, நாள்:26.12.2011) 10 புதிய கடைகள் கட்டப்பட்டு அதில் 6 எண்ணிக்கையிலான கடைகள் 09.07.2013 முதல் ஏலமிடப்பட்டும் 4 எண்ணிக்கையிலான கடைகள் எவரும் ஏலம் எடுக்காததால் காலியாக இருந்து வருகிறது. பெரிய குப்பம் பேருந்து நிலைய பழைய கடைகளில் ஒரு கடை (கடை எண்.1 40 ஆண்டுகளுக்கு முன்பு பொது நிதியில் கட்டப்பட்டது) 01.04.2015 முதல் ஏலம் எடுக்கப்படாமல் காலியாக இருந்து வருகிறது."

7. மேற்குறிப்பிட்ட 5 கடைகள் ஏலமிடப்படாததால் ஏற்பட்டுள்ள உத்தேச வருவாய் இழப்பீட்டுத் தொகையினை முந்தைய ஆண்டு ஏல ஆவணங்கள் மற்றும் இதர கடைகளின் ஏலத் தொகையின் அடிப்படையில் கணக்கிட்டு அறிக்கை அனுப்புமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு இம்முறை மன்ற நடுவத்தின் அறிவிப்பானை அ.ம.எண்.0596/2016/ந நாள்: 28.09.2016ன் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

8. அதன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது அறிக்கை ந.க.எண்.3441/2016/அ2 நாள்:8.12.2016ல் கீழ்க்கண்ட விரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:–

| வ.எண். | ஏலம் விடப்படாத இதர 5 கடைகளின் விபரம் | உத்தேச இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | பெரிய குப்பம் பழைய கடை (எண்.1) | ரூ.6700 x19 மாதங்கள் = ரூ.1,27,300/- |
| 2. | புதிய கடை (கடை எண்.2) | ரூ.5100 x 39 மாதங்கள் = ரூ.1,98,900/- |
| 3. | புதிய கடை (கடை எண்.3) | ரூ.5100 x 39 மாதங்கள் = ரூ.1,98,900/- |
| 4. | புதிய கடை (கடை எண்.4) | ரூ.5100 x 39 மாதங்கள் = ரூ.1,98,900/- |
| 5. | புதிய கடை (கடை எண்.5) | ரூ.5100 x 39 மாதங்கள் = ரூ.1,98,900/- |
| | மொத்தம் : | = ரூ.9,22,900/- |

9. மேற்கண்ட விவரங்களின்படி 2013-ல் நகராட்சிப் பொது நிதியில் கட்டப்பட்ட 4 கடைகள் 09.07.2013 முதல் ஏலமிடப்படாமலும், 40 ஆண்டுகளுக்கு முன்பு பொது நிதியில் கட்டப்பட்ட ஒரு கடை 01.04.2015 முதல் ஏலமிடப்படாமல் உள்ளதாலும் இந்நகராட்சிக்கு நாளது வரை வருவாயாக வந்திருக்க வேண்டிய சுமார் ரூ.9,22,900/- இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

10. அதே போல் மேலே பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது அறிக்கையின்படி, 1.4.2015 முதல் 31.5.2016 வரை ஏலம் விடப்படாததால், 21 கடைகளின் மூலம் நகராட்சிக்கு வந்திருக்க வேண்டிய வருவாய் சுமார் ரூ.54,52,874/- ஏல நடவடிக்கைகள் முடிக்கப்படாததால், இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன்படி சுமார் ரூ.63.75 லட்சங்கள் நகராட்சிக்கு வந்திருக்க வேண்டிய வருவாய் நாளது வரை மட்டும் இழக்கப்பட்டுள்ளது.

11. மேலே பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதுபோன்ற நிகழ்வுகளில் நகர்மன்றத்திற்கே முடிவுகள் எடுப்பதில் அதிகாரம் உள்ளதென்பதால் மதிப்பீடுகளை நகர் மன்றத்திற்கு தெரியப்படுத்தி நகர்மன்ற தீர்மானம் இயற்றி ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் நகராட்சிக்கு மேற்படி வருவாய் தரத்தக்க இனங்கள் மூலம் தொடர்ந்து கணிசமான வருவாய் பெற்றிருக்க வழி ஏற்பட்டு பெருமளவு வருவாய் இழப்பையும் தவிர்த்திருக்கலாம். எனவே, இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகமும், நகர்மன்றமும் போதிய முனைப்புடன் செயல்படத் தவறியுள்ளது புலனாகிறது.

12. மேலும், நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரது அறிக்கைகளில் 26.08.2015ல் இப்பொருள் குறித்து தெளிவுரை கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் மீதான ஆணை/தெளிவுரை ஏதும் நாளது வரை வரப்பெறவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 16.01.2017 நாளைய 'தினமலர்' நாளிதழ் (திருவள்ளூர் பதிப்பு) செய்தியில் ஏற்கனவே பேருந்து நிலைய கடைகளை, முன்னர் ஏலம் எடுத்திருந்த முன்னாள் குத்தகைதாரர்களது கோரிக்கை குறித்தும், சந்தை வாடகை நிர்ணயம் செய்தல் குறித்தும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பியுள்ளதும் குறித்தும், ஆணை எதிர்நோக்கப்படுவதாகவும் நகராட்சி தரப்பிலான விளக்கங்கள் குறித்தும், 21 மாதங்களாக நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பீடு குறித்தும் செய்திகள் வெளிவந்துள்ளன.

13. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள் குத்தகைக்கு விடல் தொடர்பான நெறிமுறைகளடங்கிய அரசாணை எண்.147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந. நி. 4) துறை நாள்:30.12.2000-ல் பத்தி 4(8)ல் குத்தகைத் தொகை நிர்ணயம் குறித்து

பொதுப்படையாகவோ, குறிப்பிட்ட நேர்விலோ துறைத் தலைவர்கள் தேவையான நெறிமுறைகள் வகுத்து ஆணையிடவோ, அறிவுரை வழங்கவோ வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்கக ஜனவரி 2009ல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ந.க.எண்.53114/08/ஆர்2-ல் பத்தி 11ல் இப்பொருள் குறித்து ஐயப்பாடுகள் ஏதுமிருப்பின் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு ஐயப்பாடுகள் சரி செய்து கொள்ளுமாறு நகராட்சி ஆணையர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி சுற்றறிக்கை பத்தி 12ல் ஏலம்/உரிமம் தொடர்பான அறிவுரைகளை பின்பற்றுவதில் வழு ஏதும் ஏற்படின் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர் மற்றும் இது தொடர்பான பிற அலுவலர்கள் அனைவரும் பொறுப்பாவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருவள்ளூர் நகராட்சியைப் பொறுத்தவரை இந்நிகழ்வில் வருவாய் இழப்பீடு தொடர்வதாலும், தணிக்கைத் தடைகள் எழ வாய்ப்புகள் உள்ளதாலும் பத்திரிக்கைகளில் தொடர்ந்து மந்த நிலை குறித்து செய்திகள் வரப்பெறுவதையும் கருத்தில் கொண்டும், இத்தகைய நிலைக்கான காரணங்களை ஆய்வு செய்து சம்மந்தப்பட்டவர்கள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு விளக்கங்கள் பெறப்பட வேண்டியது அவசியமென இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

தக்க தெளிவுரை/ஆணையினை நகராட்சி ஆணையருக்கு உடன் வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை இம்முறை மன்ற நடுவம் கேட்டுக் கொள்கிறது.

2017–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6–ம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

14/2/2017
செயலாளர்.

14.2.17

14/2/17

பெறுநர்:

1. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   சேப்பாக்கம், சென்னை – 600 005.

2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   செங்கற்பட்டு மண்டலம்.

3. நகராட்சி ஆணையர்
   திருவள்ளூர் நகராட்சி,
   திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் – 602 001.